**முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை:–**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.02/2025**

**–உள்–**

**அசல் வழக்கு எண்.357/2021**

1. ஜெயராஜ்
2. ஜெகநாதன் .... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

//எதிராக//

1. வரலட்சுமி
2. செல்வராணி
3. கென்னடி
4. அன்புராஜ்
5. ராஜதுரை
6. ரத்தினமாலா
7. சுதா பிரியா
8. ஜோதிலட்சுமி
9. சசிக்குமார் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த இடைநிலை மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 20.11.2025ம் தேதியன்று விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர்கள் திருவாளர்கள் K.வேலுமயில், T.ஜெயபிரகாஷ் மற்றும் S.மெர்லின் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரைஞர்கள் திருவாளர்கள். M.ரவிக்குமார் மற்றும் சே.சேவியர் சஞ்சீவ் குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை

பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்தும் வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**// உத்தரவு //**

இம்மனுவானது, அசல் வழக்கு எண்.357/2021–ல் பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 27.06.2025ம் தேதி முடித்து வைக்கப்பட்ட சாட்சியத்தை (Defendant side evidence) மீண்டும் மறுதிறவு செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது வாதிகள் / தாவாச் சொத்தில் 2/4 பாகம் கோரியும் இன்னும் பிற பரிகாரங்கள் கோரியும் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கிற்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக கடந்த 27.06.2025ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் மனுதாரர்கள் சாட்சி விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு முதல் விசாரணைக்காக தயார் நிலையில் இருந்தபோது, மேற்படி தேதியில் மனுதாரர்கள் நீதிமன்றம் தெரியாமல் வேறு ஒரு நீதிமன்றத்திற்கு சென்று, அங்கு அமர்ந்திருந்ததால் மேற்படி தேதியில் முதல் விசாரணை தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரரின் வழக்கறிஞர் அவரை தொடர்பு கொண்டும், மனுதாரரின் கைபேசி Switch off–ஆகியதால் தொடர்பு கொள்ள

இயலவில்லை. அதன் காரணத்தால் மேற்படி தேதியில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும் மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை எனக்கூறி கடந்த 27.06.2025ம் தேதி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் மனுதாரர் ஆஜராகமால் போனது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்படி அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது. எனவே கடந்த 27.6.2025ம் தேதி முடிக்கப்பட்ட மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மீண்டும் Reopen செய்து உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர்கள் பொய்யான சங்கதிகளைக் கொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேலும் இம்மனுவில் கடந்த 27.6.2025ம் தேதி மனுதாரர் விசாரணைக்கு வந்ததாகவும் வழக்கு நீதிமன்றம் தெரியாமல் வேறு நீதிமன்றத்தில் இருந்ததாகவும் தனது வழக்கறிஞரை தொடர்பு கொண்டபோது, அவரது அலைபேசி சுவிட்ச் ஆப் செய்யபட்டிருந்ததால் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை என்று கூறியிருப்பது முற்றிலும் பொய்யாகும். மேலும், இந்த அசல் வழக்கில் கடந்த 14.9.2022ம் தேதி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் அவர் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் Ex–Parte உத்தரவு செய்யப்பட்டது. மேற்படி உத்திரவை ரத்து செய்ய மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மனு செய்து அது கடந்த 18.02.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனு அனுமதிக்கப்பட்டபோது

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். மேலும், தாவா அசல் வழக்கின் துவக்கத்திலும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். எனவே, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேறு நீதிமன்றத்தில் அமர்ந்திருந்தனர் என்பது பொய்யென்பது தெளிவாகிறது. மேலும் கடந்த 27.06.2025ம் தேதி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரும் ஆஜராகவில்லை. அப்படியிருக்க வழக்கறிஞர் போன் செய்ததாகவும் அப்போது மனுதாரரின் போன் சுவிட்ச் ஆப் ஆகிவிட்டதாகவும் கூறுவது பொய்யானதாகும். மேலும் மனுதாரர்கள் /பிரதிவாதிகள் சாட்சிக்காக கடந்த 19.10.2024, 28.11.2024, 19.12.2024, 23.01.2025, 21.02.2025, 21.03.2025, 09.04.2025, 06.06.2025, 27.06.2025ம் தேதிகளில் போதிய வாய்ப்பு கொடுத்தும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. ஆனால், அசல் வழக்கினை இழுத்தடிப்பதற்காக பொய்யான விபரங்களைக் கூறி இந்த மனுவினை மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கை இழுத்தடிப்பதற்காகவும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளை அலைக்கழிப்பு செய்வதற்கும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளனர். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யபட வேண்டும்.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u>**–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ?

5. விசாரணையின்போது இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகளோ ஆவணங்களோ முன்னிடப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>** :–

அசல் வழக்கானது, தாவா சொத்தில் வாதிகளுக்குரிய 2/4 பாகத்தை பிரதிவாதிகள் நயமிடர் பார்த்து பிரித்து வாதிகளுக்கு தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றிந்த வழக்கறிஞர், அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக கடந்த 27.06.2025ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி தேதியில் மனுதாரர்கள் சாட்சி விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு முதல் விசாரணைக்காக தயார் நிலையில் இருந்தபோது, மேற்படி தேதியில் மனுதாரர்கள் நீதிமன்றம் தெரியாமல் வேறு ஒரு நீதிமன்றத்திற்கு சென்று, அங்கு அமர்ந்திருந்ததால் மேற்படி தேதியில் முதல் விசாரணை தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும், மனுதாரரின் வழக்கறிஞர் அவரை தொடர்பு கொண்டபோது, மனுதாரரின் கைபேசி Switch off–ஆகியதால் தொடர்பு கொள்ள இயலவில்லை என்றும், அதன் காரணமாக மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், எனவே, மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை எனக்கூறி கடந்த 27.06.2025ம் தேதி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது வழக்கை மீண்டும் மறுதிறவு செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

8. மனுச் சங்கதிகள் மறுக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், இம்மனுவில் கடந்த 27.6.2025ம் தேதி மனுதாரர் விசாரணைக்கு வந்ததாகவும் வழக்கு நீதிமன்றம் தெரியாமல் வேறு நீதிமன்றத்தில் இருந்ததாகவும் தனது வழக்கறிஞரை தொடர்பு கொண்டபோது, அவரது அலைபேசி சுவிட்ச் ஆப் செய்யபட்டிருந்ததால் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை என்று கூறியுள்ளது உண்மையல்ல என்றும், இந்த அசல் வழக்கில் கடந்த 14.9.2022–ம் தேதி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் அவர் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் Ex–Parte உத்தரவு செய்யப்பட்டு, மேற்படி உத்திரவை ரத்து செய்ய மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மனு செய்து அது கடந்த 18.02.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனு அனுமதிக்கப்பட்டபோதும், அசல் வழக்கின் துவக்கத்திலும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். எனவே, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேறு நீதிமன்றத்தில் அமர்ந்திருந்தனர் என்பது உண்மையல்ல என்றும், அன்றைய தினத்தில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரும் ஆஜராகவில்லை என்றும், மேலும் மனுதாரர்கள் /பிரதிவாதிகள் சாட்சியத்திற்காக கடந்த 19.10.2024, 28.11.2024, 19.12.2024, 23.01.2025, 21.02.2025, 21.03.2025, 09.04.2025, 06.06.2025, 27.06.2025ம் தேதிகளில் போதிய வாய்ப்பு கொடுத்தும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்தது அசல் வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கில் பொய்யான சங்கதிகளை முன்வைத்து அசல் வழக்கினை மறுதிறவு செய்ய கோருவது ஏற்புடையதாக இல்லை எனக் கடுமையாக ஆட்சேபித்துள்ளார்.

9. இருதரப்பு வாதுரைகளும் வழக்கு கோப்பும் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டதில், பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்காக கடந்த 19.10.2024, 28.11.2024, 19.12.2024, 23.01.2025, 21.02.2025, 21.03.2025, 09.04.2025, 06.06.2025, 27.06.2025ம் தேதிகளில் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை என கருதி பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், அசல் வழக்கை மறு திறவு செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

10. மனுதாரர் / பிரதிவாதி வழக்கு நீதிமன்றம் தெரியாமல் வேறு நீதிமன்றத்தில் இருந்ததாகவும் தனது வழக்கறிஞரை தொடர்பு கொண்டபோது, அவரது கைபேசி Switch off செய்யபட்டிருந்ததால் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் அசல் வழக்கானது பாகம் கோரிய வழக்கு என்பதால் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்கள் தரப்பு சாட்சியத்தை முன்வைக்க ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என இம்மன்றம் கருதும் அதேவேளையில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏற்பட்ட கால விரயத்தைக் கருத்தில் கொண்டு இம்மனுவை அதிகபட்ச செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியில்**, மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ........ /–யை ......12.2025–ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி ஆகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா ..... .12.2025

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.12.04 10:52:48 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்**

**சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் :–**

இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.12.04 10:52:52 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
திண்டுக்கல்